**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 352/2023**

**Deposition of P.W.** 15

Name : டாக்டர். திரு. ராஜேஷ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**08.04.2026**

**Accused Present.**

முதல் விசாரணை–

நான் தற்போது ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் பேராசியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 14.12.2021ம் தேதியன்று குலசேகரம் காவல்நிலைய குற்ற எண். 441/2021 வழக்கில் இறந்து போன ஸ்டேன்லி (வயது 21) மதிக்கத்தக்க ஆண் நபரை பிரேத பரிசோதனை செய்வதற்காக வேண்டுகோள் கடிதம் பெற்றேன். அன்று பிற்பகல் 04.30 மணிக்கு பிரேத பரிசோதனை செய்ய தொடங்கி 05.30 மணி வரை பிரேத பரிசோதனை செய்தேன். பிரேதமானது தலைமைக்காவலர் 584 திரு.ஜஸ்டின் ராஜ் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது. பிரேதத்தில் பிரேத விறைப்பு தன்மை இரண்டு கால்களிலும் காணப்பட்டது. பிரேதம் சாதாரண போஷாக்குடன் இருந்தது, கை, கால், விரல் நகங்கள் நீல நிறத்தில் காணப்பட்டது. வாயில் வெள்ளை நிற நுரை காணப்பட்டது. இடது காலின் கீழ் 1/3 பகுதி மற்றும் வலது கால் முட்டின் முன்பக்கம் பழைய பழுப்புடன் கூடிய புண்கள் காணப்பட்டன.

கீழ் கண்ட இறப்பிற்கு முந்தைய காயங்கள் பின்வருமாறு.

1) ¼ X ¼ cm மற்றும் 1 X ½ cm அளவிலான சிறிய அழுத்திய சிராய்ப்பு காயங்கள் வலது தோள்பட்டையின் வெளிப்புறமாக காணப்பட்டது. அது சிவந்த நிறத்தில் இருந்தது.

இரைப்பையில் சுமார் 100 மில்லி அளவிலான கிரே நிற திரவம் பூச்சி கொல்லி மணத்துடன் காணப்பட்டது. நாவடி எலும்பு இயல்பாக காணப்பட்டது.

நுரையீரல் கோர்த்தும், குறுக்கு வெட்டு தோற்றத்தில் ரத்தம் செறிந்தும் காணப்பட்டது.

சிறுகுடலில் சுமார் 30 மில்லி அளவுள்ள கிரே நிற திரவம் பூச்சி கொல்லி மணத்துடன் இருந்தது. மற்ற உள்ளுறுப்புகள் இயல்பாக காணப்பட்டது.

உள்ளுறுப்புகள் ராசாயன பரிசோதனைக்காக வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதில் ஈத்தேல் ஆல்கஹாலோ, விஷமோ கண்டறிய இயலவில்லை என அறிக்கை வழங்கப்பட்டது. அதன் படி இறப்பிற்கான காரணம் பிரேத பரிசோதனையில்அவர் விஷம்அருந்தி இறந்ததாக தெரிய வந்தது. ஆனால் அது எந்தவிதமான விஷம் என்று கண்டறிய இயலவில்லை என்று கருத்து கூறி சான்று வழங்கினேன் அந்த சான்று அ.சா.ஆ.4.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

தடவியல் அறிக்கையில் விஷமோ, ஆல்கஹாலோ இல்லை என அறிக்கை கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். இறந்து போனவர் விஷம் அருந்தி இறந்து போனார் என்று கூற இயலாது என்றால் சரியல்ல. பிரேத பரிசோதனையின் போது பூச்சி மருந்து வாடை அடித்ததாலும், வாயில் நுரை இருந்ததாலும், நுரையீரலில் நீர்கோர்த்து இருந்ததாலும் இறந்து போனவர் விஷம் அருந்தி இறந்திருக்கலாம் என கருத்து வழங்கினேன். இறுதி கருத்துரையை நான் 18.06.2022ம் தேதி வழங்கினேன். தடய அறிவியல்



அறிக்கை 28.04.2022ம் தேதி தயார் செய்யப்பட்டது. தடவியல் அறிக்கை பெற்ற பிறகு தான் நான் இறுதி கருத்துரையை வழங்கினேன். எனது

இறுதி கருத்துரை மருத்துவ விதிமுறைகளுக்கு மாறானது என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 352/2023**

**Deposition of P.W.** 16

Name : டேவிட் ராஜ்

S/o, D/o, W/o : நாகப்பன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**08.04.2026**

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது அரியாம்பகோடு, குலசேகரத்தில் வசித்து வருகிறேன். நான் சொந்த வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். 14.12.2021ம் தேதி காலை 09.00 மணியளவில் நான் எனது தோட்டத்திற்கு சென்று கொண்டிருந்த போது நெல்சன் என்பவருக்கு சொந்தமான தோட்டத்தில் ஸ்டாலின் என்பவர் இறந்து கிடந்ததாக சொன்னார்கள். அங்கு சென்று பார்த்த போது உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை படம் வரைந்து கொண்டிருந்தார். அப்போது தயார் செய்த பார்வை மகஜரில் நானும், சுரேஷ்குமாரும் கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.5. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் பார்க்கும் போது பிரேதம் அங்கு இல்லை. அப்போது தான் ஆம்புலன்சில் ஏற்றி சென்றார்கள். ஸ்டாலின் எனது ஊர்காரர், தெரிந்த நபர். ஸ்டாலின் இறந்த பிறகு அது தொடர்பாக 2 முறை காவல்

நிலையத்திற்கு போனேன். காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். பார்வைமகஜரில் உள்ள கையொப்பத்தை காவல்நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் போலீசார் சொல்லி கொடுத்து பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.